பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 12 திங்கட்கிழமை 27.12.2021 கதிர் 280

## போலி நாணயத்தாள்கள்; மக்களே மிக அவதானம்!

### மத்திய வங்கி அறிவுறுத்து

இலங்கை முழுவதும் போலி நாணயத் தாள்கள் அதிகளவில் புழக்கத்தில் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. ☞ 2

# அரசால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயர்!

## மைத்திரி கடும் விசனம்



அரசின் செயற்பாடுகளால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்நாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் நாட்டின் அரச இயந்திரத்தின் தன்மைக்கு ஏற்ற வகையிலேயே உதவிகளை வழங்கும். மனித உரிமை ☞ 2

## அரசின் அதிருப்தியாளர்கள் ஜே.வி.பியுடனும் தீவிர பேச்சு

மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணி அமைக்க ஆளுந்தரப்பைச் சேர்ந்த சிலர் பேச்சு நடத்தி வருகின்றனர். ☞ 2

## வீதியால் சென்ற சிறுவனைக் கத்தியால் குத்தி விட்டுத் தொலைபேசி கொள்ளை!

### யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் பயங்கரம்

வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனை வழிமறித்து, கத்தியால் குத்திவிட்டு தொலைபேசியைக் கொள்ளையிட்டு சென்ற வழிப்பறிக் கொள்ளை கும்பலைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

குறித்த கொள்ளைச் ☞ 2

## சிலைகளைக் கடத்தியவர்கள் ஜன. 5 வரை விளக்கமறியலில்

### 20 இற்கும் மேற்பட்ட சிலைகளும் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வலிகாமம் வடக்கில் உள்ள ஆலய விக்கிரகங்களைக் கடத்தி விற்பனை செய்து ☞ 2

## ஜனாதிபதியின் செயலர் மாற்றம்

### உறுதிப்படுத்தினார் கோட்டா



ஜனாதிபதி செயலாளர் பதவியில் மாற்றம் செய்யப்படும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான இன்றைய சந்திப்பின் பின்னர் மதிய போசனத்தில் தேசிய பத்திரிகை ஆசிரியர்கள் சிலருடன் நடந்த சிநேகபூர்வமான கலந்துரையாடலின்போது ஜனாதி ☞ 2

## ஜனாதிபதி செயலாளர் ஜயசுந்தரவின் இராஜிநாமா கடிதம் கோட்டாவால் ஏற்பு

### புதிய பதவியும் தயார் நிலையில்



ஜனாதிபதி செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தரவினால் கையளிக்கப்பட்ட இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என தெரியவருகின்றது.

அரசுக்குச் சார்பான ஊடக வலையமைப்பொன்றின் இணையத்தளம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன், புதிய ஜனாதிபதி செயலாளராக, தற்போதைய பிரதம செயலாளர் காமினி செனரத் நியமிக்கப்படக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பி.பீ.ஜயசுந்தர பதவி விலக வேண்டும் என அரசுக்குள்ளேயே அழுத்தங்கள் வலுத்த நிலையில், அவர் பதவி துறக்க தயாரானார். ஆரம்பத்தில் ஜனாதிபதி கடிதத்தை ஏற்கவில்லை. எனினும், தற்போது ☞ 2

## இ.தொ.காவை அழைப்பது எமக்கு பிரச்சினை இல்லை

### மனோ எம்.பி. விளக்கம்



தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அது எமக்குப் பிரச்சினையாக அமையாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு ☞ 2

## வடக்கு - கிழக்கை இணைக்க ஒருபோதும் துணைபோகாதீர்!

### முஸ்லிம் கட்சிகளிடம் முஸ்தபா வலியுறுத்து



வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகள் ஒருபோதும் ஆதரவு வழங்கக்கூடாது.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கூறியவை வருமாறு:-

தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய அரசிடம் கடிதமொன்றை கையளிக்க முற்படுகின்றன. அந்தக் கடிதத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் கோரினால், அதனை வழங்கவே கூடாது. ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## போலி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்துக்கு இடமான நாணயத் தாள் ஒன்று காணப்பட்டால் பாதுகாப்புச் சின்னம் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் அதனைத் தம்வசம் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

நாணயத்தாளைக் கொண்டு வந்தவர், அவரது தோற்றம், வாகனத்தில் வந்தால்வாகனத்தின்விவரம், பணத்தாளின் மதிப்பு மற்றும் வரிசை எண் ஆகியவற்றைப் பதிவு செய்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது குற்றப் புலனாய்வுத்துறையின் போலி நாணயப் பிரிவினரின் 0112422176 மற்றும் 0112326670 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்துத் தெரிவிக்க வேண்டும் என்றும் மத்திய வங்கி மேலும் கேட்டுக்கொண்டுள்ளது.

## அரசால் சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்கள், ஜனநாயகம், நீதிமன்றின் சுயாதீனத்தன்மை, பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத்தன்மை போன்ற காரணிகள் குறித்து அவதானிக்கப்படும்.

கடந்த காலங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள் தற்போது தள்ளுபடி செய்யப்படுகின்றன.

நாம் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றோம். இன்று எம்மைப் பாதுகாப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

ஊழல், மோசடிகள், வீண் விரயங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. அதிகாரம் ஒரு சிலருக்கு இடையில் மட்டும் பகிரப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டால் எந்தவொரு தரப்பும் எமக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதே யதார்த்தமாகும்.

சட்டம் - ஒழுங்கு, மனித உரிமை விவகாரங்களில் மோசமான நிலைமை காணப்பட்டால் எமக்கு எவரும் உதவ மாட்டார்கள் - என்றார்.

## அரசின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி கூட்டணியுடன் விமல் வீரவன்ஸ மற்றும் குமார் குணரட்னம் ஆகியோர் இணைய முடியும். எனினும், தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்குவார்கள் என்றால், அவர்கள் கூட்டணியில் இணைந்து புதிய அரசை அமைக்கும் போராட்டத்தில் இணைந்துகொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் மற்றும் எரிவாயு விநியோகத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமைக்கு எதிராக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் நீதிமன்றத்துக்குச் சென்றமையை நான் வரவேற்கின்றேன்.

அதேபோல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள்விடுதலைமுன்னணியுடன் இணைவது தொடர்பாகப் பேசியமைக்குத் தயாசிறி ஜயசேகரவுக்கு நன்றி கூறுகிறேன்.

இதனடிப்படையில், தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள்விடுதலைமுன்னணியுடன் இணைந்து செயற்பட முடியும்.

ஊழல், மோசடிகளுக்கு எதிராக அரசுக்குள் இருந்துகொண்டு போராடும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் ஏற்கனவே மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணி அமைக்கப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இவர்களின் உதவியைத் தீர்க்கரமான சந்தர்ப்பத்தில் நாங்கள் பெற்றுக்கொள்வோம்.

இதனடிப்படையில், தேசிய மக்கள் சக்தியின் நிபந்தனையை ஏற்கும் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு, எதிர்காலத்தில் மக்கள் சார்பான அரசை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுள்ளார்.

பதவி துறக்க முடிவெடுத்துள்ள பி.பீ. ஜயசுந்தரவுக்கு நிதி அமைச்சர் சிரேஷ்ட ஆலோசகர் பதவியொன்று கிடைக்கப்படபெறவுள்ளது. இதற்கு நிதி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## இ.தொ.காவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான மனோ கணேசன் தெரிவித்தார்.

'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் - ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வழங்கும் நெகிழ்ச்சியான வரவேற்பு, மனோ கணேசனின் கொதிநிலையை மேலும் உயர்த்தும் என்பது நிச்சயம்' என்று 'காலைக்கதிர்' பத்திரிகை இன்று 'இனி இது இரகசியம் அல்ல' பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தது. அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளவை வருமாறு:-

அரசில் உள்ள கட்சிகள் எமது பொது நிலைப்பாடுகளுக்கு உடன்பாடு தெரிவித்தால், அவர்களையும் இப்போதே உள்வாங்குவதில்கூட எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. உண்மையில் இது ஏற்பாட்டாளர்களது பணி. வேறு எந்தவொரு கட்சி அரசியல்வாதி, சென்று இன்னொரு கட்சி அரசியல்வாதியை சந்திப்பது என்பது அவரவர் 'நிகழ்ச்சி நிரல்'. நாம் இதுபற்றி பற்றி அலட்டிக்கொள்ளவே இல்லை.

அப்படி பார்த்தால், இ.தொ.கா. போன்ற மலையகக் கட்சிகள் மட்டுமல்ல, நீண்டகாலமாக 13ஆவது திருத்தம் பற்றி பேசி வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, எம்.பி. பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தலைமையிலான கட்சி போன்ற வடக்கு - கிழக்கு கட்சிகளும் நிறைய உள்ளன. இப்படி சில முஸ்லிம் கட்சிகளும் இருக்கலாம்.

ஆனால், முதல் வட்டத்தில் எதிரணி கட்சிகளையும், பின்னர் ஆளும் அணி கட்சிகளையும் அணுகலாம் எனக் கூட்ட ஏற்பாட்டாளர்கள் எமக்கு கூறினார்கள்.

அவர்களது கூற்றில் ஒரு நியாய ஒழுங்கு தெரிவதால், அதை நாம் ஏற்றுக்கொண்டடோம். இது பற்றி ஏற்பாட்டாளர்களான ரெலோ கட்சியினர் தமது நிலைப்பாட்டைக் கூறியுள்ளனர். முதல்வட்டத்தில்வேண்டுமானாலும்கூட யாரும் அழைக்கப்படட்டும். எமக்கு இதுவொரு பிரச்சினையே இல்லை - என்றார்.

## ஜனாதிபதியின் செயலர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி இந்தத் தகவலை வெளியிட்டார் என்று ஜனாதிபதி மாளிகைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய ஜனாதிபதி செயலாளராக பிரதமரின் செயலாளர் காமினி செனரத் அல்லது நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளிவந்துள்ளது.

எவ்வாறாயினும், ஊடக நிறுவன பிரதானிகளுடன்நடந்தசந்திப்பின்போது, இது குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும் ஜனாதிபதி வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிலைகளைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இருவரையும் எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வலி. வடக்கு பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் இருந்த பிள்ளையார் உள்ளிட்ட இந்து கடவுள்களின் விக்கிரகங்களைக் கடத்தி கொழும்பில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கீரிமலை - நல்லிணக்கபுரம் மற்றும் புத்தூர் - நவக்கிரி பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடந்த 24ஆம் திகதி காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த 9ஆம் திகதி முதல் 23ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், கொழும்புக்குக் கடத்தி விற்பனை செய்யப்பட்ட சிலைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கொழும்பு விரைந்த பொலிஸ் குழுவினர் 25ஆம் திகதி கொழும்பில் விற்பனை செய்யப்பட்ட 20 சிலைகளை மீட்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து, அவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## வீதியால் சென்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் சுன்னாகம் - தாவடி பகுதியில் கடந்த சனிக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடம் பகுதியைச் சேர்ந்த 16 வயதான சிறுவன் ஒருவன் தொலைபேசியில் பேசியபடி அன்றைய தினம் சைக்கிளில் சென்றுள்ளார்.

இதன்போது அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் குறித்த சிறுவனைக் கத்தியால் குத்திவிட்டு தொலைபேசியைப் பறித்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வடக்கு - கிழக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தைவிடவும் அதிகளமான முஸ்லிம்கள் வெளி மாவட்டங்களில்தான் வாழ்கின்றனர். எனவே, புரிந்துணர்வு உடன்படிக்கைக்குச் செல்ல முன்னர் அனைத்து முஸ்லிம்கள் தொடர்பிலும் கட்சிகள் சிந்திக்க வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் 'முட்டாள்கள்'!

நோயைப் பற்றித் தெரிந்திருந்தும் – அதன் குணங்குறி மற்றும் உரிய மருந்துகள் பற்றி எல்லாம் அறிந்திருந்தும் – அந்த நோய்க்கு உரிய சிகிச்சை செய்யாமல், நோயின் உபாதையைத் தொடர்ந்து அனுபவித்து உழலுபவனை எப்படி அழைக்கலாம்? முட்டாள் என்றுதானே கூற வேண்டும்?

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உபதேசமும் செயலும் இத்தகைய ஒப்புவமையைத்தான் நமது மனதில் ஏற்படுத்துகின்றன.

நாடு இன்று மிகப்பெரிய நெருக்கடியில் நிற்கிறது. ஆட்சியாளர்களின் தீர்க்க தரிசனமில்லாத, முட்டாள்தனமான, எதேச்சதிகாரப் போக்கிலான நடவடிக்கைகளால் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது நாடு. மூத்த அரசியல்வாதியான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அவ்விவகாரத்தை ஒட்டி தமது அரசியல் முதிர்ச்சியின் அடிப்படையில் சரியான விளக்கங்களை –காரணங்களைத் – தருகின்றார்.

''நாட்டின் ஆட்சி முறைமையின் அடிப்படையிலேயே சர்வதேச தரப்புக்கள் உதவும். சட்டம் – ஒழுங்கு, மனித உரிமை விவகாரங்களில் மோசமான நிலைமை காணப்பட்டால் எமக்கு யாரும் உதவ மாட்டார்கள்'' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டை தொகுதி உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

"அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் நாட்டின் அரச இயந்திரத்தின் தன்மைக்கு ஏற்ற வகையிலேயே உதவிகளை வழங்கும். மனித உரிமை விவகாரங்கள், ஜனநாயகம், நீதிமன்றின் சுயாதீனத்தன்மை, பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத்தன்மை போன்ற காரணிகள் குறித்து அவதானிக்கப்படும்.

"கடந்த காலங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள் தற்பொழுது வாபஸ் பெறப்படுகின்றன. நாம் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றோம். இன்று எம்மைப் பாதுகாப்பதற்கு எவரும் முன்வரவில்லை. ஊழல் மோச டிகள், வீண் விரயம் என்பன மிகவும் அதிகரித்துள்ளன.

"அதிகாரம் ஒரு சிலருக்கு இடையில் மட்டும் பகிரப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டால்எந்தவொருதரப்பும்எமக்குஉதவிசெய்யமாட்டார்கள் என்பதே யதார்த்தமாகும்" – என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருக்கின்றமை நூற்றுக்கு நூறு வீதம் சரி. உண்மை. யதார்த்தம். நிதர்சனம்.

அவர் ஜனாதிபதியாக இருந்த போது ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டது. மனித உரிமைகள் பேணப்பட்டன. நீதிமன்றங்களினதும், சட்டம் – ஒழுங்குப் பிரிவினதும் (பொலிஸினதும் ) சுயாதீனம் பேணப்பட்டது. அவை எல்லாம் இப்போது இல்லை. எதேச்சதிகாரமே தலை விரித்தாடுகின்றது. நிலைமை தலைகீழ்.

இப்படி உண்மையை உணர்ந்து உரைக்கும் அவரிடம் இரண்டே இரண்டு கேள்விகள்தான் கேட்கப்பட வேண்டியுள்ளன.

ஒன்று – இவற்றை அவரது ஆட்சிக் காலத்தில் எப்படி நிலைநிறுத்த முடிந்தது?

இரண்டு – இப்போது அவை தலைகீழானமை எங்ஙனம்?அல்லது அதற்குக் காரணம் யாது?

முதலாவது கேள்விக்குப் பதில் – அவரது அரசினால் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூலமே இவை யாவும் நேர் சீர்செய்யப்பட்டு, ஒழுங்கு படுத்தப்பட்டன என்பதாகும்

இரண்டாவது வினாவுக்குப் பதில் – 19 ஆவது திருத் தத்தை மாற்றி, கோட்டா அரசினால் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மூலமே அவை யாவும் சீரழிக்கப்பட்டன.

19ஆவது திருத்தம் மூலம் நாட்டுக்கு நன்மை செய்த அவரும், அவரது கட்சியினரும் சேர்ந்துதான் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றி விட்டு, இப்போது "சுடுகுது மடியைப் பிடி" என்கிறார்கள்.

நாட்டைப் பற்றிப் பீடித்திருக்கும் நோயைப் பற்றித் தெரிந்தும் – அதற்கான காரணங்களை அறிந்திருந்தும் – அவை பற்றி இப்படி பெரிய உபதேசங்களைச் செய்தபடி, அந்த நோய்க்குக் காரணமான தரப்புகளுக்கு முண்டு கொடுத்தப்படி அரசியல் வியாக்கியானம் பேசும் இவர் போன்றோரை "அரசியல் முட்டாள்கள்" என்று அழைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

# 60 வயதுக்கும் மேற்பட்ட 50 ஆயிரம் பேர் எந்த கொவிட் தடுப்பூசியும் பெறவில்லை!

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

60 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 50 ஆயிரம் பேர் எந்த விதமான கொவிட் தடுப் பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்க மருத்துவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதனை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச்செயலாளர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றால் உயிரிழப்போரில் பெரும்பான்மையானவர்கள் வயது முதிர்ந்தவர்கள் என்பதால் கட்டாயமாக முதலாம், இரண்டாம் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளை இந்த வயதுப் பிரிவினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வீதி விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள்



கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வீதி விபத்துக்களால் பெருமளவான உயிரிழப்புகள் ஏற்படுவதுடன் பலர் அங்கவீனமடைகின்ற நிலையும் காணப் படுகின்றன.

இந்த நிலையில் வீதி விபத்துக்களைத் தடுக்கும்வகையில்பாடசாலைமாணவர்கள், பாதசாரிகள் பயணிகள் மற்றும் வாகன சாரதிகள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையிலே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆகியன இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து வீதி விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில்



துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப் பட்டன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலிருந்து ஏ–9 வழியாகக் கிளிநொச்சி பொதுச்சந்தை வரை சென்று பொதுச்சந்தை வளாகத்திலும் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



# மின் கம்பத்தை மோதித்தள்ளிய கார்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா – மூன்று முறிப்பு பகுதியில் மின்சாரக் கம்பத்துடன் கார் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

அநுராதபுரம் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற கார் ஒன்று வவுனியா, மூன்றுமுறிப்புபகுதியில்பயணித்துக் கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதி ஓரத்தில் காணப்பட்ட மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். மேற்படி விபத்து காரணமாக மின்சாரக் கம்பம் உடைந்து விழுந்துள்ளதுடன், அப்பகுதியில் மின்சாரத் தடையும் ஏற்பட்டுள்ளது.

மின்சார கம்பத்தைச் சீர்செய்து மக்களுக்கு மின் வழங்கும் நடவடிக்கையை மின்சாரசபையினர் முன்னெடுத்துள்ளனர்.

விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# உக்ரைனில் போர் நிறுத்தம் செய்ய முத்தரப்பு இணக்கம்!

கிழக்கு உக்ரைனில் முழுமையான போர் நிறுத்தம் மேற்கொள்ள ரஷ்யா, உக்ரைன் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு (OSCE) ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடையே நடைபெற்ற முத்தரப்பு பேச்சு உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு உக்ரைனில் உக்ரைன் அரச படையினருக்கும் ரஷ்ய ஆதரவு கிளாச்சியாளாகளுக்கும் இடையே முழுமையான போர் நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பாக ரஷ்யா, உக்ரைன் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு பிரதிநிதிகள் இடையே பேச்சு நடைபெற்று வந்தது.

இந்தப் பேச்சியின் முடிவில் கடந்த ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகவும் உறுதியாகவும் கடைப்பிடிக்க அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர் என ரஷ்யா, உக்ரைன் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின் உக்ரைனுக்கான தூதர் மிக்கோ கினூனென் தெரிவித்துள்ளார்.

கிழக்கு உக்ரைன் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வந்தது. கடந்த 2020-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தோடு ஒப்பிடுகையில் இந்த டிசெம்பரில் போர் நிறுத்த மீறல்கள் 5 மடங்கு அதிகமாயின. இதனால், இரு தரப்புக்கும் இடையே எப்போது வேண்டுமானாலும் முழுமையான போர் வெடிக்கும் அபாயம் இருந்து வந்தது.

இந்தச் சூழலில் ஏற்பட்டுள்ள இந்த புதிய உடன்படிக்கை, கட்டுப்பாட்டு எல்லையின் இருபுறமும் உள்ள மக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும் என மிக்கோ கினூனென் குறிப்பிட்டுள்ளார். சோவியத் யூனியன் கடந்த 1991 ஆம் ஆண்டில் சிதறுண்ட போது அதில் ஓர் அங்கமாக இருந்த உக்ரைன் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது.

சுமாா 30 சதவீதத்தினா் ரஷ்ய மொழி பேசும் அந்த நாட்டில் ஐரோப்பிய செல்வாக்கு அதிகரித்துவிடக் கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. நேட்டோ அமைப்பில் உக்ரைனை உறுப்பினராகக் கூடாது என்றும் உக்ரைனில் நேட்டோ நிலைகள் அமைக்கப்பட கூடாது என்றும் ரஷ்யா திட்டவட்டமாகக் கூறி வருகிறது.

இந்தச் சூழலில், ஐரோப்பிய ஆதரவு உக்ரைன் அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சோந்த ரஷ்ய ஆதரவு கிளாச்சியாளாகள் கடந்த 2014 ஆம் ஆண்டு போரிட்டனா.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவாகள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லூஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினா. அப்போது, உக்ரைனின் அங்கமாக இருந்த கிரீமியா மீது படையெடுத்த ரஷ்யா, அந்த தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளாச்சியாளாகளுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடையே நடந்து வந்த போர், பெலாரஸ் தலைநகர் மின்ஸ்கில் கடந்த 2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்தது.

ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எனினும், அதன் பிறகும் இரு தரப்பினருக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் ஏற்பட்டு உயிரிழப்புகள் தொடர்ந்து வந்தன. இந்தச் சூழலில், உக்ரைன் எல்லை அருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்து வருகிறது. உக்ரைனும் கிளாச்சியாளாகள் கட்டுப்பாட்டு எல்லை அருகே தங்களது படைகளைக் குவித்து வருகிறது. உக்ரைன் மீது படையெடுத்து, கிரீமியாவைப் போலவே அந்த நாட்டையும் தன்னுடன் இணைத்துக்கொள்ள ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கூறி வருகின்றன. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில், கிழக்கு உக்ரைன் பகுதியில் முழு போர் நிறுத்தம் மேற்கொள்ள ஏற்பட்டுள்ள உடன்படிக்கை, இந்தப் பதற்றத்தைத் தணிப்பதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மியன்மாரில் இராணுவத் தாக்குதலில் 30 பொதுமக்கள் சாவு



மியன்மாரில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சேவ் த சில்ரன் அமைப்பு தனது இரண்டு பணியாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

படையினர் கார்களில் இருந்து இறக்கி அவர்களை சித்திரவதை செய்தனர்; கொலை செய்தனர் பின்னர் உடல்களை எரித்தனர் என சேவ் த சில்ரன் அமைப்பு தெரிவித்துள்ளது.

கயா என்ற மாநிலத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பெண்கள் குழந்தைகளும் உள்ளனர் என சேவ் த சில்ரன் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீதான இந்த ஈவிரக்கமற்ற நடவடிக்கையைக் கண்டித்துள்ள சேவ் த சில்ரன் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான பணிகளுக்கு பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த இரு பணியாளர்கள் இந்தச் சம்பவத்தில் சிக்குண்டு காணாமல்போயுள்ளனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அவர்களது வாகனம் தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது என சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது.

அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் எங்கள் பணியாளர்கள் மீதான தாக்குதலால் கடும் அச்சமடைந்துள்ளோம்,நாங்கள் மியன்மாரி;ல் உதவி அவசியமாக உள்ள மில்லியக் கணக்கான சிறுவர்களுக்கு உதவி வழங்கும் மனிதாபிமான அமைப்பு என சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது.

தாக்குதலின் போது எரியூட்டப்பட்ட வாகனங்களைக் காண்பிக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட பகுதியில் பயங்கரவாதிகளையே கொலைசெய்தனர்என இராணுவம்தெரிவித்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களை எதிர்க்கும் கரேனி தேசிய பாதுகாப்பு அமைப்பு பொதுமக்களே கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

# பாக்கிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லை பிரச்னைக்கு தீர்வு

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லையில் வேலி அமைப்பது தொடர்பாக எழுந்த பிரச்சினைக்கு சுமுக தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நம் அண்டை நாடான பாக்., ஆப்கனுடன் 2,600 கி.மீ., எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளது. இந்நிலையில் பயங்கரவாதிகள் ஊடுருவல், கடத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்காக பாக்., 2017 முதல், ஆப்கன் எல்லையில் வேலி அமைத்து வருகிறது.அத்துடன் எல்லையோர சோதனைச் சாவடிகள், கண்காணிப்புக் கோபுரங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.பாக்., எல்லையில் வேலி அமைக்கும் திட்டத்திற்கு ஆரம்பம் முதல் ஆப்கன் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இந்நிலையில் சமீபத்தில் ஆப்கனைச் சேர்ந்த தலிபான்கள், எல்லையில் வேலை அமைக்கும் பணியை நிறுத்தும்படி மிரட்டினர்.அத்துடன் எல்லையில் பாக்., அமைத்த கம்பி வேலியை அகற்றி எடுத்துச் சென்றனர். இதனால் பாக்., வேலி அமைக்கும் பணி தடைப்பட்டதை அடுத்து இரு தரப்பிலும் பதற்றம் ஏற்பட்டது.

இது குறித்து பாக்., இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:எல்லையில் வேலி அமைப்பது தொடர்பாக எழுந்துள்ள பதற்றத்தை தணிக்க பாக்., – ஆப்கன் இராணுவ அமைச்சக அதிகாரிகள் இடையே பேச்சு நடந்தது. இதில் இரு தரப்பும் சுமூகமாக பேசித் தீர்வு காண முடிவு செய்யப்பட்டுள்ளது. என்று அவர் கூறினார்.இதற்கிடையே தலிபான் இராணுவ அமைச்சர் முல்லா யாகூப், பிரச்சினைக்குரிய எல்லைப் பகுதியை பார்வையிட்டார். அவர் கூறுகையில், எல்லையில் வேலி அமைக்கும் பணிகள் தொடர்பான பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது, என்றார்



# நோபல் பரிசில் வென்ற தென்னாபிரிக்க பேராயர் மரணம்



தென்னாபிரிக்கபேராயர் எமரிட்டஸ்டெஸ்மண்ட்டுட்டு தனது 90ஆவது வயதில் காலமானார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பேராயர், கேப்டவுனில் காலமானார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் பேராயர் எமரிடஸ் டெஸ்மண்ட்டுட்டுவின் மறைவு, நமது தேசத்தின் துக்கத்தின் மற்றொரு அத்தியாயமாகும் என ஜனாதிபதி சிரில் ரமபோசா தெரிவித்தார்.

1931ஆம் ஆண்டு கிளர்க்ஸ்டோர்ப்பில் பிறந்த அவர், 1984 இல் தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான அவரது பங்கிற்காக அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

1975 ஆம் ஆண்டில் ஜொகன்னஸ்பர்க்கில் உள்ள செயின்ட் மேரிஸ் கதீட்ரலின் டீனாக நியமிக்கப்பட்ட முதல் கறுப்பின தென்னாபிரிக்கர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 18 வயதுக்கு உட்பட்ட 33 லட்சம் சிறுவர்களுக்கு ஜனவரி 3 முதல் தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பமாகிறது


ஒமிக்ரோன் அச்சுறுத்தல் அதிகரித்துவரும் சூழ்நிலையில், தமிழகத்தில் 15 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட 33 லட்சம் சிறுவர்களுக்கு பாடசாலைகளுக்கே நேரடியாகச் சென்று கொரோனாத் தடுப்பூசி செலுத்த தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. கொரோனாத் தடுப்பூசி 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு தவணைகளாகச் செலுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் நேற்றும் 16 ஆவது பாரிய தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

15 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஜனவரி மூன்றாம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தப்படும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

அதேபோன்று, ஜனவரி 10 ஆம் திகதி முதல், சுகாதார மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் மோடி தெரிவித்தார்.

தமிழகத்தில் சிறுவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணியை ஆரம்பிப்பது தொடர்பாகத் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தகவல் அளித்தார்.

சென்னை அடையாறு மசூதி காலனியில் நடந்த 16 ஆவது பாரிய தடுப்பூசி முகாமை ஆரம்பித்து வைத்த அவர், தமிழகம் முழுவதும் 15 முதல் 18 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி ஜனவரி 3ஆம் திகதி தொடங்கும். அதேபோல், தமிழகத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு கோடியே 4 லட்சம் பேருக்கும், முன்களப் பணியாளர்கள் 9 லட்சத்து 78 பேருக்கும் ஜனவரி 10 ஆம் திகா முதல் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்தப்படும். சிறுவர்களுக்கு பாடசாலைகளுக்கே நேரடியாகச் சென்று தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது இடங்களில் முகாம்கள் அமைத்தும் தடுப்பூசி செலுத்தப்படும்.



தமிழகத்தில் இதுவரை 34 பேர் ஒமிக்ரோனால்பாதிக்கப்பட்டுள்ளனர்என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேர் சிகிச்சை முடிந்து வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 22 பேர் சிகிச்சையில் உள்ளனர். அதேபோல் ஒமிக்ரோன் அறிகுறி என்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சை பெற்றுவரும் அனைவரும் நலமுடன் இருக்கின்றனர். இந்தியாவிலேயே கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதில் தமிழகம் முதல் மாநிலமாக விளங்குகிறது. 6 லட்சத்து 18 ஆயிரத்து 700 கர்ப்பிணிகளுக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது, என்று தெரிவித்துள்ளார்.




## மத்திய பிரதேசம் மற்றும் இமாச்சலிலும் ஒமிக்ரோன் வைரஸ் திரிவு அடையாளம்

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகைக் கொரோனா வைரஸ் திரிவான ஒமிக்ரோன் இந்தியாவிலும் கண்டறியப்பட்டது. மகாராஷ்டிரா, புதுடெல்லி, தமிழகம், குஜராத், தெலுங்கானா, ராஜஸ்தான், கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் ஒமிக்ரோன் வைரஸ் பரவியுள்ளது.

இந்த நிலையில், ஒமிக்ரோன் வைரஸ் பாதிப்பு இமாச்சலப் பிரதேசத்திலும் பரவியுள்ளமை அறியப்பட்டுள்ளது. கனடாவில் இருந்து கடந்த 3ஆம் திகதி இமாச்சல பிரதேசம் திரும்பிய 45 வயது பெண்மணி ஒருவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் ஒமிக்ரோன் வைரஸ் இருக்கின்றமை கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து, 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட அவர் சிம்லாவில் உள்ள இந்திராகாந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேபோல், அமெரிக்கா, இங்கிலாந்து, தான்சானியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து மத்தியப் பிரதேசத்துக்குச் சென்ற எட்டுப்பேருக்கும் ஒமிக்ரோன் தொற்று கண்டறியப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பின்னணிப் பாடகர் மாணிக்க விநாயகம் மறைவு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி



பிரபல தமிழ்த்திரைப்படப் பின்னணிப் பாடகரும் நடிகருமான மாணிக்க விநாயகம் உடல் நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 73. அவரது மறைவையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார். அத்துடன் அவர் அவருடைய உடலுக்கு நேரில் சென்றும் அஞ்சலி செலுத்தியுள் ளார்.

நடிகர் விக்ரம் நடிப்பில் வெளிவந்த தில் திரைப்படத்தில் கண்ணுக்குள்ள கெளுத்தி என்ற பாடலின் மூலம் திரையுலகில் பின்னணிப் பாடகராக அறிமுகமான இவர், தனித்துவமிக்க காந்தக் குரலால் ரசிகர்களை ஈர்க்கும் வல்லமை படைத்தவர். சுமார் 800இற்கும் மேற்பட்ட திரைப் பாடல்களை அவர் பாடியுள்ளார்.

நடிகர் தனுஷின் 'திருடா திருடி' படத்தின் மூலம் நடிகராகவும் இவர் அறிமுகமாகி, பல்வேறு குணச்சித்திர கதாபாத்திரங்களிலும் நடித்துள்ளார். பிரபல பரதநாட்டிய ஆசிரியர் வழுவூர் பி.இராமையா பிள்ளையின் இளைய மகனான இவர், சிறுவயது முதலே பாடும் திறமையைப் பெற்றிருந்தார். ஏராளமான பக்திப் பாடல்களைப் பாடி இசையமைத்துள்ளார்.

அவரது உடல் திருவான்மியூரில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. திரைத்துறையினர் பலரும் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், துன்பமானாலும், துள்ளலானாலும், தனது குரல் வளத்தால் அவ்வுணர்வுகளை துல்லியமாகக் கடத்தி இசைவிருந்தளித்தவர். பெயரைப்போலவே பண்பிலும் மாணிக்கமாக ஒளிர்ந்தவர் வழுவூர் மாணிக்க விநாயகம், என்று தெரிவித்துள்ளார்.



## இராணுவ ஹெலிகொப்டர் விபத்து எஞ்சிய பாகங்களும் மீட்கப்பட்டன

உதகையில் கடந்த எட்டாம் திகதி விபத்துக்குள்ளான இந்திய இராணுவ ஹெலிகொப்டரின் முக்கிய பாகத்தை விமானப் படையினர் மீட்டெடுத்துள்ளனர். வனப்பகுதியில் இருந்து சூலூர் விமானப்படை விமான நிலையத்துக்கு அதனை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

விபத்து நடந்த நாள் முதல் இராணுவ மற்றும் விமானப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் குறித்த பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு வந்தனர். ஹெலிகொப்டரின் சில பெரிய பாகங்களை அங்கிருந்த அகற்றி இராணுவ மற்றும் தனியார் வாகனம் மூலம் எடுத்துச் செல்லும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்தநிலையில் வனப்பகுதியிலிருந்து மீதமிருந்த ஒன்றரை தொன் எடையுள்ள இயந்திரம் மற்றும் வால் பகுதிகளையும் இரவு நேரத்தில் அங்கிருந்து அகற்றியுள்ளனர்.

19 நாள்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த நச்சப்ப சத்திரம் பகுதியிலிருந்து உயரதிகாரிகளின் ஆலோசனைக்குப் பின்னர் இராணுவத்தினர் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## கொரோனா அச்ச மத்தியிலும் வார இறுதியில் சென்னையில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

சென்னை அடுத்த வண்டலூர் பூங்காவுக்கு நேற்று மற்றும் நேற்று முன்தினம் ஆகிய வார இறுதி விடுமுறை நாள்களில் சுமார் 28 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர் என பூங்காவின் நிர்வாகத் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகத் தகவலளித்த அவர், சனிக்கிழமையன்று 12 ஆயிரத்து 500 பேரும், நேற்று ஞாயிறு தினத்தில் 15 ஆயிரத்து 600 பேரும் பூங்காவிற்குவந்துபார்வையிட்டுள்ளனர். கொரோனாப் பரவல் காரணமாக குறைந்த அளவே சுற்றுலாப் பயணிகள் வருகை இருந்த நிலையில், கடந்த இரு நாள்களில் குடும்பத்துடன் மக்கள் திரண்டு வருகைதந்துள்ளனர், எனத் தெரிவித்தார்.



இதேபோல சென்னை மெரினா கடற்கரையிலும் விடுமுறை நாள் என்பதால் பொது மக்கள் குவிந்த வண்ணம் இருந்தனர். மெரினா கடற் கரையில் பொதுமக்கள் சமூக இடைவெளி, முகக்கவசம் என எந்த ஒரு கொரோனாத் தடுப்புக்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றாமல் இருந்ததும் கவனிக்கத்தக்கது. கடற்கரையில் பொது மக்களின் கூட்டம் அதிகமாக இருந்ததால், சென்னையில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரிக்க இதுவே வழிவகை செய்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மண் மாபியாக்களின் கூடாரமாக மட்டுநகர் மாற இடமளிக்கோம்!

## வியாழேந்திரன் காட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளுக்கு நாள் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கைகளில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாபியாக்கள் குவிந்து வருகின்றனர்.

எமது மண் வளத்தைச் சூறையாடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மட்டக்களப்பு மாவட்டம் மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட இடமளிக்கக்கூடாது என இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எமது மாவட்டத்தின் பல பிரதேசங்கள் அத்திப்பட்டி போல் அழிந்து போகும் நிலை காணப்படும் எனவும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு – பங்குடாவெளி தளவாய் பிரதேசத்தில் நீர் விநியோக வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் சார்ந்து பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாங்கள் அரசாங்கத்திடமிருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்களின் காலடிக்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அதில் பின்தங்கிய கிராமப் புறங்களில் உள்ள அனைத்து வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மின்சாரம் இல்லாத கிராமங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டமும் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் படுவான்கரை பிரதேசங்களைச் சார்ந்த கிராம பிரதேசங்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் இல்லாமை பாரிய பிரச்சினையாகக் காணப் படுகின்றது.

இதற்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காக நீர்ப்பாசன செழுமை வேலைத் திட்டத்தின் கீழ் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் தளவாய், இலுப்பை சேனை, பெரிய புல்லுமலை, மரப்பாலம் மற்றும் ராஜபுரம் ஆகிய பிரதேசங்களில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக முயற்சியாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மறுபுறம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களால் எமது மண் வளம் அளிக்கப்பட்டு வருகின்றது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுளை வீதியைச் சேர்ந்த பல கிராமப்பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு பல அரசியல் பின்னணிகளைக் கொண்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மணல் அகழ்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவே அன்றி வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களின் ஆக்கிரமிப்புக்கு அல்ல. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் வளம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட்டது.

இவ்வாறு சட்டவிரோத மண் அகழ்விற்கு இடம் கொடுப்போமானால் இன்னும் 20 வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமங்கள் அழியும் நிலை உருவாகும். தொடர்ந்து எம்மால் இந்த மாவட்டத்தின் மண்வளம் சூறையாடுவதற்கு இடம்கொடுக்க முடியாது. சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டு வருகின்றோம். எமது பிறந்த மண் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட்டு வருகின்றோம். அரசியல் நோக்கங்களைத் தவிர்த்து மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளுக்குக் குரல் கொடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# திருக்கோவில் துப்பாக்கிச் சூட்டு பலியான பொலிஸாருக்கு பதவியுயர்வு

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில், பொலிஸ் உத்தியோக்கத்தர் ஒருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் பலியான 4 பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்குள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமையுடன், மூவர் படுகாயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக கடந்த 24 ஆம் திகதியுடன் அமுலாகும் வகையில் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளான கே. எல். எம். அப்துல் காதர், ஏ. நவிநாத், டி.பி.கே.பி. குணசேகர மற்றும் டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகியவர்களுக்கு இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் சார்ஜன் வீடுசெல்வதற்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் விடுமுறை கோரியுள்ளமையுடன், விடுமுறை வழங்காததால் ஆத்திரமடைந்த பொலிஸ் சார்ஜன் இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என விசாரணையில் தெரிய வந்திருந்தது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த பொலிஸ் நிலையம் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத்தரும் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் கைதான சார்ஜனிடம் தொடர் விசாரணை!

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில், துப்பாக்கிச்சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கிய வாக்குமூலம் தொடர்பாக, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், கைதுசெய்யப்பட்ட துப்பாக்கிச்சூடு மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரிடம், பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது தாயாரைப் பார்ப்பதற்காக வீட்டுக்குச் செல்வதற்கு விடுமுறை கிடைக்கப்பெறாமை காரணமாக, குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என சந்தேகநபர் விசாரணைகளில் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு இறுதியாக ஏழு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டிருந்ததாக விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒவ்வொரு மாதமும் அவர் விடுமுறை பெற்றுள்ளார் எனவும் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், அவரின் வாக்குமூலம் தொடர்பாகப் பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவிஉயர்வுவழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மறைந்த பொலிஸ் அதிகாரிகளான கே.எல்.எம்.அப்துல் காதர், ஏ.நவிநாத், டி.பி.கே.பி.குணசேகர மற்றும் டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகியோருக்கே இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை – கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவு!

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லிப்பொத்தானை 96 ஆவது மைல் கல் பாலத்துக்கு அருகில் இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 5.55 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது, திருகோணமலையில் இருந்து சீமெந்து ஏற்றிக்கொண்டு சென்ற பார ஊர்தி ஒன்றும் மாத்தளையில் இருந்து மணல் ஏற்றியவாறு மறு திசையிலிருந்து வந்த டிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இந்நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# தென்னாபிரிக்க – இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்று



இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. மழை காரணமாக போட்டி ஆரம்பமாவதில் தாமதமேற்பட்டது.

நேற்றைய முதல்நாள் ஆட்ட நிறைவின்போது தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி, 3 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கே.எல்.ராகுல் 122 ஓட்டங்களுடனும், ரஹானே 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

செஞ்சூரியனில் நேற்று ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது. மயங் அகர்வால் 60 ஓட்டங்களுடனும் புஜாரா ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் விராட் கோலி 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தென்னாபிரிக்க அணியின் லுங்கி இங்கிடி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தார்.

## லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடருக்கான ஏசியன் லயன்ஸ் அணியில் இலங்கையின் நட்சத்திரங்கள் பலர் இணைப்பு

முன்னாள் முன்னணி கிரிக்கெட் வீரர்களுக்காக ஓமானில் நடைபெறவுள்ள லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரில் விளையாடும் ஏசியன் லயன்ஸ் அணியின் வீரர்கள் விபரம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

2022ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 18ஆம்திகதி அல்அமெரோட் மைதானத்தில் ஆரம்பமாகும் இந்த லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரில் ஏசியன் லயன்ஸ் அணி அடங்கலாக இந்தியா லெஜண்ட்ஸ் மற்றும் உலக பதினொருவர் லெஜண்ட்ஸ் அணி என மொத்தம் மூன்று அணிகள் பங்கெடுக்கின்றன.

இந்த தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள ஏசியன் லயன்ஸ் அணியில் இலங்கையின் சனத் ஜயசூரிய, பாகிஸ்தானின் சொஹைப் அக்தா, சஹிட் அப்ரிடி, முத்தையா முரளிதரன் ஆகியோரும் இடம்பெற்றிருக்கின்றனர்.

மொத்தம் 16 முன்னாள் வீரர்கள் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கும் ஏசியன் லயன்ஸ் அணியில் சமிந்த வாஸ், ரொமேஷ் களுவிதாரன, திலகரட்ன டில்ஷான், யூனுஸ் கான் போன்றவர்களோடு ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளின் முன்னாள் வீரர்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.






### ஐ.பி.எல். 2022 தொடரில்

## லக்னோ அணி வழிகாட்டியாக கௌதம் கம்பீர் நியமனம்

எதிர்வரும் 2022 ஐ.பி. எல். சீசனில் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள லக்னோ அணியை முன் னாள் இந்திய வீரரும் ஐ.பி.எல்.லில் கொல்கத்தா அணியின் முன்னாள் தலைவருமான கௌதம் கம்பீர் வழிநடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை லக்னோ அணியின் உரிமையாளர் சஞ்சீவ் கோயங்காவும் உறுதி செய்துள்ளார்.

2012 மற்றும் 2014 என இரண்டு முறை கொல்கத்தா அணியை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வெல்லவைத்தவர் கம்பீர். 154 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி, 4217 ஓட் டங்களை அவர் எடுத்துள்ளார்.

இந்தப் புதிய பொறுப்பு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கம்பீர், மீண்டும் ஐ.பி.எல். களத்துக்குள் வந்திருக்கின்றமை மிகச்சிறப்பானது. என்னை, லக்னோ அணியின் வழிகாட்டியாக நியமித்தமைக்கு கோயங்காவுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். வெற்றிபெற வேண்டுமென்ற நெருப்பு எனக்குள் இன்னும் அணையவில்லை. இந்தமுறை அணி வீரராக இல்லாமல் வழிகாட்டியாக செயல்பட வாய்ப்புக் கிடைத்துள்ளது, என குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துவித கிரிக்கெட் போட்டி களிலிருந்தும் ஓய்வுபெற்ற பின்னர், கம்பீர் அரசியலில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றமையோடு பி.ஜே.பி.யின் லோக் சபா உறுப்பினராகவும் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழர்களின் கலை வரலாற்றில் புலிகளின் காலம் பொற்காலம்!

## சிறீதரன் எம்.பி. பெருமிதம்







தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கலாலயத்தின் வெளியீடான விழுதொலிகள் இறுவட்டை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

போர் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களுக்கு உரித்தான அந்தஸ்து கிடைப்பதில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு கலைஞர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது அது உண்மை தான்.

எம்மவர்கள் இந்த மண்ணில் இருந்த போது கலைகளையும், கலைஞர்களையும் வளர்க்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் என்ற பிரிவு உருவாக்கப் பட்டு அதனூடாகப் பாரம்பரிய கலைகளையும், பண்பாட்டையும் வளர்த்திருந்தார்கள்.

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமே பொற்காலம் ஆகும்.

கலைஞர்களும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பங்கு மகத்தானது. தங்களின் கலைப்படைப்புக்களால் போராட்டத்தின் பக்கம் மக்களை எழுச்சிகொள்ள வைத்தவர்கள் என்றால் மிகையில்லை. கலைஞர்களும் இந்த மண்ணில் மீண்டும் சிறப்பாக உரிய அந்தஸ்தத்தோடு வாழும் காலம் உருவாக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வு பாடகர் றெஜீஸ் தலைமையில் கரைச்சி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் மற்றும் கலைஞர்களா வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மனித கடத்தலைத் தடுப்பதற்காக பல நடவடிக்கைகள் எடுக்க முடிவு!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

மனித கடத்தலைத் தடுக்க எதிர்வரும் ஆண்டு பல நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மனித கடத்தல் தடுப்பு அதிரடிப்படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கபட்டுள்ளதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதக் கடத்தலைத் தடுக்க புலனாய்வு அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அமைப்புகளுடன் நேரடி ஒருங்கிணைப்பில் வலுவான நிறுவன பொறிமுறையை நிறுவ கடந்த ஜூலை மாதம் மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இரகசிய கருத்துக்கணிப்பு நடத்தியுள்ளது சீனப் பிரதிநிதிகள் குழு?

சீன பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கையில் இரகசியமாக கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கருத்துக் கணிப்பு தொடர்பான இரகசிய அறிக்கை பெய்ஜிங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென சிங்கள இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த நாளகளில் இலங்கை வருகை தந்த இந்த சீன குழுவினர், சீன அரசாங்கம் இலங்கை தொடர்பில் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவான சீன நிலைப்பாடு என்பன தொடர்பாகக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சீனாவின் நடவடிக்கை களில் எவ்வாறான தவறுகள் இழைக்கப்பட்டன அவற்றை எவ்வாறு திருத்திக்கொள்வது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தகவல்கள் திரட்டப்பட்டு இரகசிய அறிக்கையொன்று பெய்ஜிங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பிரகாரம் இதுவரையில் சீனாவால் பின்பற்றப்பட்டு வந்த ராஜபக்ஷக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் ஓரளவு மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என அந்த இணையத் தளம் தெரிவித்துள்ளது.

# பெண் பொலிஸ் உத்தியோகஸ்தரை துஷ்பிரயோகம்செய்த பொறுப்பதிகாரி!

புதிதாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட பெண் பொலிஸ் உத்தியோகஸ்தரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்டம் கந்தர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே இவ்வாறு விசாரணைக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலையத்திற்குள், பொறுப்பதிகாரி, பெண் பொலிஸ் உத்தியோகஸ்தரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படுகிறது.

மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிாந்த டி சொய்சாவின் ஆலோசனைக்கு அமைய சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழு நடத்திய விசாரணைகளை அடுத்தே பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மாத்தறை நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்படவுள்ளார்.

# மலையகத்தில் 10ஆம் வீட்டுத்திட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும்

## ராமேஸ்வரன் தெரிவிப்பு

மலையகத்துக்கான 10 ஆம் வீட்டுத்திட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி இராமேஸ்வரன் தெரிவித்தார்.

அத்தோடு, கொரோனா நெருக்கடி நிலைமை இருந்தாலும் மலையகத்துக்கான அபிவிருத்திகள் நிறுத்தப்படமாட்டா எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மலையக சமூகத்தின் வளர்ச்சியென்பது கல்வியில்தான் தங்கியுள்ளது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம். அதனால்தான் சௌமியமூர்த்தி தொண்டமான், தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இன்றுவரை கல்விக்கு நாம் அதிக நிதியை ஒதுக்குகின்றோம். கல்வி சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். உதவிகளை செய்கின்றோம். மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் இன்று அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்நிலைமை மாறுவதற்கும் கல்வியே எமக்கு கைகொடுக்கும். எமது பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டால் நிச்சயம் வீறுநடை போடலாம். அதற்கு பக்கபலமாக காங்கிரஸ் துணை நிற்கும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்குவதில் ஒரு சில தோட்டக்கம்பனிகள் இழுத்தடிப்பு செய்துவருகின்றன. இது தொடர்பில் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. எனவே, விரைவில் சாதகமான சூழ்நிலை உருவாகும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2021இல் வெளியிடப்பெற்றது.